### வண்ணாரப்பேட்டை - விமான நிலையம் இடையே ஒருவழிப்பாதையில்

# கடுமையான பாறைகளுக்கு இடையே சுரங்கம் தோண்டும் பணிகள் முடிந்தது



மே தின பூங்கா- சைதாப்பேட்டை இடையே மெட்ரோ ரயில் சுரங்கப்பாதை பணி முடிந்ததை தொடர்ந்து, டிஎம்எஸ் ரயில் நிலையம் பகுதியில் டனல் போரிங் மிஷின் பாறைகளை உடைத்துக்கொண்டு வெளியே வருகிறது.

## மெட்ரோ ரயில்வே ஊழியர்கள் உற்சாகம்

சென்னை, அக்.20: வண்ணாரப்பேட்டை - விமான நிலையம் இடையே ஒரு வழித்தடத்தில் சுரங்கம் தோண்டும் பணி நேற்றுடன் முடிந்தது. கடுமையான பாறைகளுக்கு இடையே சுரங்கம் தோண்டும் பணி தடைபட்டு வந்த நிலையில், தற்போது முழுவதும் முடிவடைந்ததால் ஊழியர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர்.

தமிழகத்தில், வண்ணாரப்பேட்டையில் இருந்து விமான நிலையம் வரையும், சென்ட்ரலில் இருந்து புனித தோமையர் மலை வரையும் மெட்ரோ ரயில் இயக்குவதற்கான பாதை அமைக்கும் பணிகள் கடந்த 10 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இதில் 24 கி.மீ. தூரம் சுரங்கப்பாதையிலும், 21 கி.மீ. தூரம் உயர்த்தப்பட்ட பாதை என மொத்தம் 45 கி.மீ.தூரம் மெட்ரோ ரயில் ஓடும் வகையில் தண்டவாளம் அமைக்கப்பட்டு வருகிறது.

இதில் தற்போது நேரு பூங்காவில் இருந்து புனித தோமையர் மலை வரையும், சின்னமலையில் இருந்து விமான நிலையம் வரை மெட்ரோ ரயில் இயக்கப்பட்டு வருகிறது.

சென்னையில் உயர்த்தப்பட்ட பாதையில் மொத்தமுள்ள 21கி.மீ. தூரம் தண்டவாளம் மற்றும் ரயில் நிலையம் அமைக்கும் பணிகள் முடிந்து, மெட்ரோ ரயிலும் இயக்கப்பட்டு வருகிறது. ஆனால், சுரங்கப்பாதையில் மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணிகள் இன்னும் முடிவடையவில்லை. காரணம், சென்னையில் பூமிக்கு அடியில் 15 முதல் 20 மீட்டர் ஆழத்தில் சுரங்கம் தோண்டும் பணிகள் நடைபெறுகிறது. இந்த வழித்தடத்தில், மணல், பாறை, களிமண், தண்ணீர் என மாறி மாறி வருவதால் டனல் போரிங் மிஷின் மூலம் சுரங்கம் தோண்டும் பணி சவாலாக அமைந்துள்ளது.

குறிப்பாக, மே தின பூங்காவில் இருந்து எல்ஐசி, ஆயிரம் விளக்கு (அண்ணா சாலை), ஜெமினி, தேனாம்பேட்டை, டிஎம்எஸ், சைதாப்பேட்டை பகுதியில் சுரங்கம் தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்த, ரஷியாவை சேர்ந்த கம்பெனியினர், இந்த பகுதியில் அதிகளவு பாறைகள் இருப்பதாக கூறி 2015ம் ஆண்டு பணியை பாதியில் விட்டு விட்டு ஓட்டம் பிடித்தனர். இதனால் அந்த பகுதியில் சுமார் ஒரு ஆண்டு பணிகள் நடைபெறாமல் இருந்தது. அதன்பிறகு மீண்டும் டெண்டர் விடப்பட்டு கடந்த ஒரு ஆண்டாக அண்ணா சாலை பகுதியில் சுரங்கம் தோண்டும் பணி நடைபெற்றது.

அதன்படி எல்ஐசி முதல் டி.எம்.எஸ். வரை ஒருவழி பாதையில் கடந்த 17ம் தேதியுடன் சுரங்கம் தோண்டும் பணிகள் முடிவடைய உள்ளது என்று மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் அறிவித்தனர். அறிவித்தபடி, அந்த பகுதிக்கு அன்றைய தினம் பத்திரிகையாளர்களும் அழைத்து செல்லப்பட்டனர். ஆனால், கடுமையான பாறைகள் இருந்ததால் இறுதி நேரத்தில் டனல் போரிங் மிஷின் பழுதானதால் திட்டமிட்டபடி சுரங்கப்பாதையில் பணிகள் முடிவடைய தாமதம் ஆனது.

> தற்போது நேரு பூங்காவில் இருந்து புனித தோமையர் மலை வரையும், சின்னமலையில் இருந்து விமான நிலையம் வரை மெட்ரோ ரயில் இயக்கப்பட்டு வருகிறது

பின்னர், அந்த கோளாறு சரி செய்யப்பட்டு நேற்று முன்தினம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வெற்றிகரமாக டிஎம்எஸ் ரயில் நிலையம் அமைய உள்ள பகுதியில் நேற்று முன்தினம் மாலை 3 மணி அளவில் டனல் போரிங் மிஷின் வெற்றிகரமாக பாறைகளை உடைத்துக் கொண்டு வெளியே வந்தது. இதன்மூலம் எல்ஐசி - சைதாப்பேட்டை இடையே ஒரு வழி பாதையில் சுரங்கம் தோண்டும் பணிகள் முழுவதும் முடிவடைந்தது. இதை, அங்கிருந்த அனைத்து ஊழியர்களும் உற்சாகமாக கொண்டாடினர்.

இதுகுறித்து மெட்ரோ ரயில் உயர் அதிகாரி கூறும்போது, “சென்னையில் முதல் கட்டமாக தொடங்கப்பட்ட சுரங்கம் தோண்டும் பணியில் ஒரு பாதையில் நேற்று முன்தினம் மாலை 3 மணியுடன் சுரங்கம் தோண்டும் பணிகள் அனைத்தும் முடிந்தது. மற்றொரு பாதையில் இன்னும் ஒரு மாதத்தில் பணிகள் முடிவடையும். குறிப்பாக, இந்த வழித்தடத்தில் கடுமையான கிரானைட் வகை பாறைகள் இருந்ததால் சுரங்கம் தோண்டும் பணி மிகவும் சவாலாக இருந்தது. டனல் போரிங் மிஷின் அதிகளவில் சேதம் ஏற்பட்டது. தற்போது இங்கு சுரங்கம் தோண்டும் பணி வெற்றிகரமாக முடிவடைந்துள்ளதால் ஊழியர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர். இதையடுத்து சுரங்க ரயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, விமான நிலையத்தில் இருந்து அண்ணாசாலை வழியாக மே தின பூங்கா வரை 2018ம் ஆண்டு மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் சுரங்க பாதையில் மெட்ரோ ரயில் இயக்கப்படும். 2018ம் ஆண்டு இறுதிக்குள் சென்ட்ரல் ரயில் நிலைய சுரங்க பணிகளும் முடிவடைந்து, முதல் கட்டமாக அறிவிக்கப்பட்ட 45 கி.மீ. தூரம் மெட்ரோ ரயில் பாதையின் அனைத்து பகுதியில் மெட்ரோ ரயில் இயக்கப்படும். பின்னர் வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் வரை 9 கி.மீ. தூரம் மெட்ரோ ரயில் பணிகள் விரைவுபடுத்தப்படும்” என்றார்.